4. கவன ஈர்ப்பு.

கோவை மாநகரில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடி தண்ணீர் வழங்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 41 இன் கீழ் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரங்கநாதன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கொண்டுவருவார்.

திரு. கே. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை மாநகரிலுள்ள மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடி நீர் விடுவதால் அந்த நகர மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர் குறித்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகளின் அவசியம் குறித்து இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கோயம்புத்தூர் நகரில், ஒருவருக்கு 20 காலன் நீர் வீதம் 1 லட்சம் மக்கள் தொகைக்கு சிறுவாணி ஆற்றிலிருந்து நீர் வழங்கும் திட்டம் 1931 ஆம் ஆண்டு முதல் செயலில் இருந்து வருகிறது. கோடை காலம் நீங்கலாக ஏனைய காலங்களில் நாளொன்றுக்கு 4.1 மில்லியன் காலன் நீர் வழங்கப்படுகிறது. தவிர, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் 79 துளைக் கிணறுகளைத் தோண்டியுள்ளது. இவற்றினால் நாளொன்றுக்கு 0.65 மில்லியன் காலன் நீர் கிடைக்கிறது. எனவே, கோடை காலம் தவிர, ஏனைய காலங்களில் சாதாரணமாக நாளொன்றுக்கு 4.75 மில்லியன் காலன் நீர் வழங்கப்படுகிறது.

சிறுவாணி தலைப்பகுதியில் நீர்க்கொள்ளளவு திறன் மிகவும் குறைவே. அதோடு கோடை காலங்களில் ஆற்றில் நீர் அதிகமாக வராததால் சிறுவாணி நீர்த் தேக்கத்தில் நாள் ஒன்றுக்கு வரும் நீர் அளவு 2.4 மில்லியன் காலனாகக் குறைந்துள்ளது. மிகவும் வறண்ட காலங்களில் இந்த அளவிற்கும் குறைவாகவே நீர் வருகிறது.

இதனைச் சரிக்கட்ட கோயம்புத்தூர் நகராட்சி மன்றம், இருட்டுப்பள்ளத்தில் ஒரு கிணற்றையும் பெரியாற்றில் ஒரு கிணற்றையும் வெட்டி விசையேற்றங்களின் மூலம் அவற்றிலிருந்து நீர் எடுத்து அதனை முக்கியக் கால்வாய்கள் மூலம் மக்களுக்கு நீர் வழங்கி வருகிறது. இவ்விரு கிணறுகளிலிருந்தும் நாளொன்றுக்கு சுமார் 0.8 மில்லியன் காலன் நீர் கிடைக்கிறது. ஏனைய காலங்களில் நாளொன்றுக்கு 4.75 மில்லியன் காலன் நீர் நீர்த்தேக்கத்திற்கு வருவதால் கோடை காலங்களில் நாளொன்றுக்கு 3.85 மில்லியன் காலன் நீர் வழங்கப்படுகிறது. கோடை காலங்களில் குறைவாக நீர் வழங்குவதனால், வழக்கமாக நீர் தேவைப்படும் காலங்களில் சமமாக நீர் வழங்குவதற்கேற்றவாறு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீரைக் கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் வழங்கி வருகிறது. பெரும்பாலும் கோடை காலங்களில் இந்த முறையிலேயே நீர் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டில், மின்சாரப் பற்றுக்குறை காரணமாக இப்பிரச்சினை மேலும் சிக்கலாகிவிட்டது. இருட்டுப்பள்ளம், பெரியாறு நீரேற்று நிலையங்களிலிருந்து 4 மணி நேரத்திற்கு மட்டுமே நீரேற்றப்படுகிறது. நகரில் ஒரு பாதிக்கு 12 மணி நேரமும் அடுத்த நாள் மற்றொரு பாதிக்கு 12 மணி நேரமும் மின்சக்தி கிடைப்பதால் 79 துளைக் கிணறுகளிலிருந்து தொடர்ந்து நீரேற்றப்பட முடியவில்லை.

கோயம்புத்தூர் நகராட்சி மன்றம், பெரியாறு நீரேற்று நிலையத்தில் எண்ணெயில் இயங்கும் பொறியை நிறுவி அதன் மூலம் 20 மணி நேரம் நீரேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. ஏற்கனவே இந்த நிலையம் 4 மணி நேரம் மின்சக்தியில் இயங்குவதால் ஆக மொத்தம் நாள் முழுவதும் இந்த நிலையம் செயல்படுகிறது. இருட்டுப்பள்ளம், பெரியாறு நீரேற்று நிலையங்களில் தொடர்ந்து நீரேற்றத் தமிழ் நாடு மின்சார வாரியம் தனியாக மின் கம்பிகளை அமைத்துக் கொடுப்பதற்காக மேற்படி வாரியத்திற்கு நகராட்சி மன்றம் ரூ. 1.10 லட்சம் அளித்துள்ளது. இப்பணி சுமார் 15 நாட்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறாக நாளொன்றுக்கு மொத்தம் 0.4 மில்லியன் காலன் நீர் தற்போது இறைக்கப் படுகிறது.

1973 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

எல்லாப் பகுதிகளுக்கும் சமமாக நீர் பகிர்ந்தளிக்க இயலும் பொருட்டு கீழ்க்காணும் பகுதிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் நீர் வழங்கப்பட்டு வருகிறது :—

(1) ஆர். எஸ். நகர்

(2) டாட்டாபாத்

(3) ராம் நகர்

(4) காமராஜபுரம்

(5) பி. என். பாளையம்

(6) எஸ். ஆர். பி. நகர்

(7) புளிய குளம்

(8) ரேஸ் கோர்ஸ்

(9) காட்டூர்

(10) அனுப்பார்பாளையம்

(11) கிரே டவுன்

(12) காந்திபுரம்

நகரத்தின் எஞ்சிய பகுதிகளில் நாள்தோறும் நீர் வழங்கப் படுகிறது.

இப்பிரச்சினையை எதிர்பார்த்து, ரூ. 10 லட்சம் செலவில் ஆழமாக 10—12 துளைக்கிணறுகள் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியதோடு இப்பணி தமிழ் நாடு குடி நீர் வழங்கு வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீர் நிலையங்களில் நீர் நிறைய இருப்பதால் அங்கு துளைக்கிணறுகள் அமைக்க வாரியத்தினால் இயலவில்லை. அம்மன்குளத்தில் துளைக் கிணறு அமைக்கும் வேலை பெரும்பாலும் முடிந்துவிட்டது. லாலிரோடு துளைக்கிணறு பாதியளவுக்கு முடிந்துவிட்டது. வாலங்குளத்தில் ஒன்றும், குமாரசாமி ஏரியில் இரண்டும் ஆக மேலும் மூன்று துளைக் கிணறுகள் அமைக்கும் பணிவரை தொடங்கியிருக்கிறது. இப்பணி முழுவதும் 1973 மே திங்களுக்குள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூர் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணும் பொருட்டு, சிறுவாணி ஆற்றிலிருந்து 1,300 மில்லியன் கன அளவு நீரைப் பெறவும், கோடை காலங்களில் நீர்

வழங்குவதற்கேற்றவாறு 650 மில்லியன் கன அடி நீர் கொள்ளும் அளவுக்கு நீர்த்தேக்கத்தினை அமைக்கவும் 1969 ஆம் ஆண்டில் இவ்வரசு கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. இதற்காக ரூ. 4.81 கோடி செலவில் விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டும் கூட இத்திட்டத்தைத் தொடங்க முடியவில்லை. ஒப்பந்தம் பற்றி கேரள அரசுடன் மீண்டும் மீண்டும் விவாதம் நடத்தப்பட்டிருப்பினும் விரிவான ஒப்பந்தம் இராததே இதற்குக் காரணம் ஆகும்.

ரூ. 320.50 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் கட்ட மற்றொரு 36 அங்குலம் விட்டமுள்ள முக்கியக் குழாய்களை அமைத்து மேம்பாட்டுப் பணிகள் செய்வதற்கான மற்றொரு செயற்குறிப்பினையும் தமிழ் நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் அரசுக்கு அனுப்பியுள்ளது. இதனைப் பரிசீலித்து அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

இது தவிர, கோயம்புத்தூர் நகரில் சேர்க்கப்பட்டுள்ள சிங்கநல்லூருக்கும் ஏனைய இடங்களுக்கும் ரூ. 13.98 கோடி செலவில் பவானி ஆற்றிலிருந்து நீர் வழங்கும் நெல்லித்துறை நீர் வழங்குத் திட்டத்தையும் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லித்துறை பகுதியில் மின்சாரம் இல்லை என்று சொன்னார்கள். அங்கே ஆயில் எஞ்சின் வைத்து நீர் எடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆயில் எஞ்சின் வைத்து தண்ணீர் எடுக்கிற ஏற்பாடுதான் அங்கே செய்யப்பட்டு வருகிறது. அங்கே செகண்ட் லைன் போடப்பட்டிருப்பதாக குறிப்பு அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஏ. சுப்பிரமணியம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : It would become a precedent. இது ஒரு முன்மாதிரியாகப் போய்விடும், எல்லோரும் பேச ஆரம்பித்துவிடுவார்கள். உங்களுக்கு விளக்கம் வேண்டுமானால் அமைச்சரைச் சந்தித்து பெற்றுக்கொள்ளலாம்.